ஜனவிநோதினி.

இல. 3. மார்ச்சு ௴ 1871. புஸ்த. II.

ஆலிபியஸ்.

பார்ஸீகதேசத்தை ஆண்டுவந்த மன்னர்களில் ஒருவனாகிய சாபாஸ் என்னும் அரசன் ராஜசபையிலுள்ள மந்திரிமார், பிரதானிகள், பிரபுக்கள் என்றிவர்களுடைய முகஸ்துதியான பேச்சிலும், மாயமான ஆசார உபசார நடபடிக்கைகளிலும் மிகுந்த வெறுப்புற்று, சிறிதுகாலம் ராஜநகரியைவிட்டு நீங்கி நாட்டுப்புறங்களிற்போய், அங்கே ஜனங்களுடைய இயற்கையான குணாதிசயங்கள் எவ்வாறிருக்கின்றனவென்று அறிந்துவரக் கருதி, ராஜகோலத்தைத் துறந்து, பிரயாணிவேடம் பூண்டு, தனக்குப் பிராணநேசமுள்ள மந்திரியொருவனை அழைத்து, அவனிடத்திற் சொல்லுகிறான்: கேளும், மந்திரியே! மனுஷருடைய சுபாவ குணமின்னதென்றாவது, அவர்களுக்குள்ளிருக்கிற யதார்த்தமான பழக்கவழக்க சுகதுக்கங்கள் இப்படிப்பட்டனவென்றாவது எனக்குத் தெரியாது. என் முன்பாக வருகிறதெல்லாம் வேஷமேயொழிய வேறொன்றுமில்லை. இயற்கையும் யதார்த்தமுமானதொன்றையும் என் கண்ணிற்காணேன். ராஜசமுகத்தில் வருகிறவர்க
வார்த்தைகளையும், மாயமான செய்கை
கட்டு அலுத்துப்போனேன். ஆதலால்
தூரமான இடங்களுக்குப்போய்,
வாயும் புறக்கணிக்கப்பட்ட ஏழை
குணாதிசயங்கள், ஒழுக்க உபசாரங்
படிப்பட்டவையென்றறிய ஆசையா
ங்கே மானிட இயற்கையையும் ஸ்வ
சொல்லி, அம்மந்திரியும் தானுமா
வழியிலுள்ள பல ஊர்களிலும் கிரா

மங்களிலுஞ்சென்று, அங்குள்ள குடிஜனங்களுடைய ஸ்திதியை யும், அவர்கள் சொற்பத்தில் திர்ப்தியடைந்து சுகமும் பலமுமாய் வாழுகிறதையும், அதிகக் கவலைவிசாரமின்றி ஆடல்பாடல்களுடன் ஆனந்த உல்லாசமாய்த் திரிகிறதையும் கண்டு, மிகுந்த சந்தோஷ மடைந்து, இந்த ஜனங்கள் இவ்வளவு சுளுவில் அடைகிற இன் பங்கள் ராஜசபையில் இல்லையேயென்று அதிசயித்துநடந்தார்கள்.

ஒருநாள் நெடுந்தூரம் வழிநடந்து ஆயாசப்பட்டு, மெத்தப் பசியுடனே ஒரு குடிசைபோய்ச் சேர்ந்தார்கள். அவ்விடத்தில் ஏழைகள் சாப்பிடுகிற சுவையற்ற முரட்டுச்சாப்பாடு இவர்க ளுக்குமுன்பாக வைக்கப்பட்டது. அதை வயிறுநிரம்பச் சாப் பிட்டு, சட்டரசவர்க்கத்துடனே புசிக்கும் ராஜபோசனத்தைப் பார்க்கிலும் அது அவர்கள் நாவிற்கு அதிக மதுரமாயிருக்கக் கண்டு, ஆனந்தமடைந்தார்கள். இவ்வாறு அவர்கள் வழியில் பல நூதனங்களைக் கண்டு கவனித்துச் செல்லுகையில், ஓர் சிறிய ஆற் றோரத்தில் நல்ல நிழல்கொடுக்கின்ற ஒரு பெரிய விருட்சத்தின் அடியில் வாலவயதுடைய வாலிபன் ஒருவன் மலர்ந்தமுகத்தோ டுங்கூடி வாயிலே புல்லாங்குழல் வைத்துப் பாடிக்கொண்டி ருக்கக் கண்டார்கள். பக்கத்தில் கொஞ்சம் ஆடுகளும் மேய்ந்து கொண்டு நின்றன. விசாரிக்கும்போது அவன் ஒரு ஆட்டிடைய னென்றும், அவனுடைய பேர் ஆலிபியஸ் என்றும், அவன் பெற் றோர் அதற்குச் சமீபமான ஓர் கிராமத்தில் வாசஞ்செய்கிறார்க ளென்றும் தெரியவந்தது. அந்த இளைஞன் ஆண்மையும், அழகும், அமைவும், சுறுசுறுப்பும், அடக்கமும், விவேகமுமுள்ளவனுய்க் காணப்பட்டான். கல்வியில்லாதிருந்தும் அவன் புத்தி மிகவும் வி லாசமாயிருந்ததினால், கல்வியோடுகூடினால் அது எப்படிப்... தாயிருக்குமோவென்று எவரும் வியக்... படியிருந்தும் தான் மற்ற இடையர்க... லாவது விசேஷித்தவனென்கிற எண்... த்துமில்லையென்று விளங்கிற்று. அ... சம்பாஷித்துக்கொண்டிருந்து ஜனங்க... த்தும், அவர்களுடைய சீர்திருவாக... செய்கிறவர்கள் நடுவே வாசஞ்செ... கூடாத அநேக விசேஷங்களை அவ... வும் அதிசயப்பட்டான். அந்த வ...

ம் ஒளியாமலும், யதார்த்த
த்து இடைக்கிடையே குறு
னுடைய சுபாவத்தைப்பா
ன் ஆனந்தசாகரத்தில் மூ
சொல்லுகிறான்: நண்பனே!
தாழ்ந்த நிலைமையும் இயற்
று பிரத்தியட்சமாய்க் காண்
ஆடுமேய்ச்சியான இந்த வா
ம், அகமகிழ்ச்சியுமுள்ளவனாயி
னுடைய பிதாமாதா பெற்ற பேறே
பபோல புத்தியும் சௌந்தரியமுமுள்ள
ற்றோர்களுடைய பாக்கியமே பாக்கியம்
ண்டாடினதுமன்றி, இயற்கையில் இத்தனை
வனுக்கு உயர்ந்த கல்விகற்பித்து, அவன்
ச்செய்து அதன் சிறப்பைக் காணவேண்டு
ந்த வாலிபனையுந் தன்னோடு இட்டுக்கொ
ர்ந்தான். சேர்ந்தவுடனே, நகரத்திலுள்ள
ராஜசபையின் சிறப்பையும் காண, ஆவி
அதிக ஆச்சரியமுண்டாயிற்று. மேலும்
அரையிற் சுற்றியிருந்த கந்தையையும், கையில்
ஆட்டிடையன்கோலையும், வாயில் வைத்தூதிய குழலை
ட்டு, விலைமதித்தற்கரிய பீதாம்பரமும், பொற்சரிகை
கயும், நவரத்தினாங்களும் தரித்து வாழும்படி வெகு
தனக்குச் சம்பவித்த மாறுதலைப்பற்றி அவன் நினைக்க
மான எண்ணங்கள் அவன் மனதில் தோன்றின. பின்பு
அவனைப் படிக்கவைத்து, எழுத்துவாசனை பிடிபட்டபின்பு
அவனுக்கு உயர்ந்த கல்விகளைப் பயிற்றுவித்தான். அவன் அவை
களையெல்லாம் அதிவிரைவிற் கற்று, இயல், இசை, நாடகம் என்று
முத்துறையிலும் தேறி, சாஸ்திரவிற்பத்தியடைந்து, நல்ல ஞான
மும், ராஜகாரியம் பார்க்கத்தக்க சமர்த்தும், ஐயப்பட ஏதுவில்லாத
உண்மையும் உள்ளவனாய் விளங்கினான். அதனால் அரசன் அவ
ன்பேரில் அதிகப் பிரியம்வைத்து, அவனைத் தான் எவ்வளவுதூரம்
உயர்த்தக்கூடுமோ அவ்வளவு உயர்த்தி, தனது கருவேல அறைத்
திறவுகோலை அவன் கையிற்கொடுத்து, அதற்கு அதிகாரியாக
அவனை நியமித்தான்.

சாபாஸ் அரசனுடைய
ஜீவியாய் வாழ்ந்து, ராஜத
கீர்த்தியடைந்து பிரபலமா
பழைய நிலைமையை மறந்
லத்தில் தன் இளமைப்பரு
அமைதலுமாய்த் தான் அ
அவற்றை இழந்துவிட்டதைக்
இளமைப்பருவமே! நீஎனக்கு
வனகாலமே! நீ எனக்கு எவ்வ
மானவள்; நான் உன்னிடத்தில் பரு
யுண்டா? நான் யாதொரு கவலையுமின
உன் நாட்களுக்கு நிகருண்டா? ஆ, இன
காணப்போகிறேன். இத்தனை செல்வங்க
உன்னைவிட்டுப் பிரித்த அரசனைக்குறித்து
டும்? அவன் என்னிடத்திலிருந்த விலைமதிக்
நீக்கிப்போட்டு, என்னை வறியனாக்கிவிட்
தோடு சொல்லத்தக்கது. ராஜசம்பத்தி
அநுபவிக்க நேரிடாத ஜனங்களே!
நீங்கள் வாழி வாழி! முக்காலும் வாழி!
இந்த வார்த்தைகள் வெகுசீக்கிரத்தில் இவனிடத்தி
னதை இதனடியில் காணலாம்.

சாபாஸ் என்னும் அரசனும், அவனுடைய ந
இறந்துபோக, சாசிபி என்னும் ராஜகுமாரன் பட்ட
தான். அப்பொழுது ஆலிபியசுடைய வாழ்வைப்பற்
ளாய்ப் பொறாமைகொண்டு, அவனுக்குக் கேடுவருவிக்கச
பார்த்துக்கொண்டிருந்த சில பிரபுக்கள் அவனைத் தாழ்த்துவ
இதுதான் நல்ல தருணமென்று சொல்லி, ராஜகுமாரனிடம் போய்,
ராஜனே! உம்முடைய பிதா ஆலிபியசுக்கு அளவிறந்த நன்மைகள்
செய்து, அவனை மிகவும் உயர்த்தி, அவன்பேரில் அதிக நம்பிக்கை
வைத்திருந்தார். ஆயினும், அவன் அதற்குப் பாத்திரனல்ல. அவன்
நம்பிக்கைத்துரோகஞ்செய்துபோட்டான். அவன் வசம் ஒப்பித்
திருந்த உடைமைகளில் விலையுயர்ந்த அநேக ஆபரணங்களை அப
கரித்துக்கொண்டான். அவன் மகா துரோகி, அவனுடைய ஆஸ்தி
யெல்லாம் ராஜபொக்கிஷத்தைத் திருடினதினால் உண்டானதே

யொழிய வேறில்லையென்று இல்லாததும் பொல்லாததுமான பலகாரியங்களை அரசனுடைய காதிலே ஊதி, ஆலிபியசைப்பற்றி அவனுடைய மனதில் பலத்த சந்தேகமுண்டாகும்படி செய்துபோட்டார்கள். அரசனோ ஆட்களுடைய தாரதம்மியமறிந்து நடத்தத்தக்க முதிர்ந்த அநுபவமின்றி, கேட்டதெல்லாம் மெய்யென்று நம்பத்தக்க இளைஞனாயிருந்ததினாலே, அவர்களுடைய வார்த்தையை வெகு லேசாய் நம்பிக்கொண்டு, தன் பிதாவுடைய அரசாட்சியில் தாறுமாறாய்ப்போன பல காரியங்களைத் தான் சீர்ப்படுத்திப்போட்டோமென்கிற பெருமை தனக்குண்டாகவேண்டுமென்று கருதி, ஆலிபியசை அவனுடைய உத்தியோகத்தைவிட்டு நீக்க வகைதேடினான். உடனே ஆலிபியசுடைய சத்துருக்கள் அதற்கு வேண்டிய ஆலோசனை சொல்லிக்கொடுத்தார்கள். சாபாஸ் அரசன் யுத்தமுகத்தில் நின்று போர்புரியும்பொழுது அவன் வழக்கமாய்த் தரித்துக்கொள்ளும் மார்ப்பதக்கமொன்றை ராஜசமுகத்தில் கொண்டுவரும்படி ஆலிபியசுக்கு கட்டளைபிறந்தது. அதைக் கொண்டுவந்தபொழுது, அதில் பதித்திருந்த ரத்நகற்களொன்றும் அதிலில்லை. ஆலிபியஸ்தான் அவற்றைத் திருடி மோசஞ்செய்திருக்கிறானென்று அவன்பேரில் குற்றஞ்சுமத்தினார்கள். அதற்கு அவன்: அப்படியல்ல, அரசனே! இந்த ஆபரணம் என்வசத்தில் வருமுன்னதாகவே உம்முடைய பிதாவின் கட்டளைப்படி இதிலிருந்த கற்களையெல்லாம் [illegible]த்துப்போட்டார்கள். இதை என்னிடத்தில் ஒப்பிக்கும்போ[illegible]தப்படிதான் கற்களில்லாமலிருந்தது என்று தகுந்த ருசுக்கொடுத்தான். இதனாலே காரியம் ஆகவில்லையென்று அவனுடைய பகைவர் கண்டு, அரசனிடம் போய், ஆலிபியஸ் வசத்திலிருக்கும் அரசனுடைய சகல ஆபரணங்களுக்கும் இரண்டுவாரத்துக்குள் ஒரு அட்டவணை தயார்செய்து கொண்டுவந்து காண்பிக்கும்படி அவனுக்கு உத்தரவு செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அந்தப்பிரகாரம் ஆலிபியஸ் தயார்செய்துகொடுத்த அட்டவணையை அரசன் தன் கையில் வைத்துக்கொண்டு, அவனுடைய சத்துருக்களையும் தன்னோடு இட்டுக்கொண்டு பொக்கிஷசாலைக்குட் புகுந்து பரிசோதனைபண்ணினான். இதிலும் குறைசொல்ல இடமில்லை. எல்லாம் சரியாயும் ஒழுங்காயும் செம்மையாயுமிருக்கக்கண்டு, ராஜகுமாரனுக்கு ஆச்சரியமுண்டாயிற்று. இவனைப்பற்றி நாம் கேள்விப்பட்டவெல்லாம் பிசகாய் அல்லோ இருக்கின்

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்.

றனவென்று நினைக்கப்போகிற சமயத்தில், விலைமதித்தற்கரிய பல உயர்ந்த சாமான்கள் வைத்திருக்கின்ற ஓர் கோணத்தில் பலத்த இருப்புக்கதவொன்று காணப்பட்டது. அது மூன்று பெரிய பூட்டுப்போட்டுப் பூட்டியிருந்தது. அப்பொழுது அத்துர்ப்புத்தி மந்திரிமார் ராஜகுமாரனை நோக்கி: அதொ தெரிகிறதே, அந்த அறைக்குள்தான் ஆலிபியஸ் திருடி ஒளித்துவைத்திருக்கிற ராஜஉடைமைகளெல்லாமிருக்கின்றனவென்றார்கள். உடனே அரசனுக்குக் கடுங்கோபம்வந்து, இந்நிமிஷமே அந்த அறையைத் திறந்து காட்டவேண்டுமென்று ஆலிபியசுக்குக் கற்பித்தான். அதற்கு அவன்: அரசனுடைய பாதத்தில் விழுந்து, ராஜனே! கேளும், நான் உம்முடைய பிதாவிடத்தில் வெகுகாலம் ஊழியஞ்செய்திருக்கிறேன். எனக்குக் கிடைத்த ஆஸ்தியெல்லாம் இவ்வறைக்குள்ளிருக்கிறது, அதைத்தவிர வேறொன்றும் எனக்கில்லை. அதையும் என்னைவிட்டு எடுத்துக்கொள்ளப்பார்க்கிறது தர்மமல்ல; என்னிடத்தில் வேறென்ன இருக்கிறதோ, அதையெல்லாம் எடுத்துக்கொள்ளும்; இந்த அறையிலிருக்கிறதைமாத்திரம் நான் அநுபவிக்கும்படி அநுக்கிரகஞ்செய்யவேண்டுமென்று சொன்னான். இந்த வார்த்தைகள் அரசனுடைய மனதில் அதிக சந்தேகத்தை உண்டுபண்ணிற்று. பின்பு ஆலிபியசை நோக்கி: சீக்கிரம் அந்த அறையைத் திறந்தாலாச்சுது, இல்லையென்றால் உன்னை அதம்பண்ணிப்போடுவேன் என்று சொல்லி ராஜகுமாரன் ஆக்குரோஷங்கொண்டான். அப்பொழுது ஆலிபியஸ்: அரசனே! கோபங்கொள்ளவேண்டாம், [illegible] ஆக்ஞைப்படி செய்கிறேனென்று சொல்லி, தன் அரையிலிருந்த சாவியையெடுத்து அப் பூட்டுகளைத் திறந்தான். திறக்கவே அரசன் முதலிய அனைவரும் அவ்வறையில் என்ன இருக்கிறதோவென்று அதிசயத்துடன் உட்புகுந்து பார்த்தபோது, அங்கே ஆலிபியஸ் ஆதியி[illegible]டியிருந்த கந்தைத்துணியும், ஆடுமேய்த்த கோலும், அவற்றின் பிறகாலே ஊதிச்சென்ற புல்லாங்குழலுமேயொழிய வேறொன்றுங் காணவில்லை. இவைகளை ஆலிபியஸ் அடிக்கடிபார்த்து, தன் பூர்வஸ்திதியைச் சிந்தித்து ஆனந்தப்பட்டுவருவான். பின்பு ஆலிபியஸ் ராஜகுமாரனை நோக்கி: மகா ராஜாவே! இதுதான் எனதருமையான பழையசெல்வம். இதுதான் எனக்கு அடிக்கடி சந்தோஷத்தைக் கொடுத்துக்கொண்டிருந்த அரும்பொருள். இந்தப் பொருளை என்னைவிட்டு எடுத்துப்போட உம்முடைய திரண்ட செல்வத்தாலா

வந்து, வல்லமையாலாவது முடியாது. நீர் இவ்வளவு பிரயத்தனஞ் செய்து என்னை ஏழையாக்கிவிட்டாலும் என்னை எவரும் இச்சிக்கத்தக்க பாக்கியவானுக்கப்போகிறது இந்தப் பொக்கிஷந்தான். இது என்னைவிட்டு ஒருக்காலும் நீங்காது. மிகையான பெருஞ்செல்வத்தை நாடாமல், உள்ளது போதுமென்றிருக்கிற பாக்கியசாலிகளுக்கு ஒழியாத இன்பத்தை அளிக்கத்தகும் செல்வம் இதுவே. இதற்கு அழிவில்லை. தரித்திரரையும் வாழ்வுடையவர்களாக்கிச் சந்தோஷப்படுத்தத்தக்க தன்மையுடைய என் செல்வமே, எனது இஷ்டசம்பத்தே! நான் உன்னை நேசிக்கிறேன். ஜீவித்தாலும் உன்னுடன் ஜீவிக்கவும், மரித்தாலும் உன்னுடன் மரிக்கவுமே நான் வாஞ்சிக்கிறேன். அரசனே! அடியேனுக்கு விடைதந்து அனுப்பும். நான் உம்முடையதையெல்லாம் உமக்கே கொடுத்துவிடுகிறேன். உம்முடைய பிதா தம்முடைய மட்டற்ற தயாளத்தினுலும் அன்பினுலும் என்னை இந்த ராஜசெல்வத்துக்குக் கொண்டுவருவதற்குமுன் எனக்குச் சொந்தமாயிருந்ததெதுவோ, அதைமாத்திரம் நான் எடுத்துக்கொண்டு போய்வருகிறேன்; [illegible]வுதந்தருளும் என்று பிரார்த்தித்தான். இவ்வார்த்தைகளைக் கேட்டுப் பிரமித்துப்போய் நின்ற அரசன்; சற்றுநேரத்துக்குப்பின் தெளிவடைந்து ஆலிபியசிடத்தில் யாதொரு தவறுமில்லை; அவன் மகா சுத்தனென்று உணர்ந்து, அவன்பேரில் அநியாயமாய்க் குற்றங்கற்பித்து அவனைக் கெடுக்கவும், தன்னை வஞ்சிக்கவும் எத்தனித்த பொருமைக்குரிசிலர்களாகிய அந்தப் பொய்யர்கள்மேல் சினமூண்டு, அந்நிமிஷமே அவர்களைத் தன் சமுகத்தினின்று அகற்றிவிடும்படி ஆக்ஞாபித்ததுமன்றி, அன்றுமுதல் ஆலிபியசைத் தனக்கு முதல்மந்திரியாகவும் நியமனஞ்செய்துகொண்டான். ராஜாங்கத்தின் பிரதான காரியங்களெல்லாம் அவன் வசத்தில் ஒப்பிக்கப்பட்டன. ஆயினும் அவன் தனது பெருஞ்செல்வத்தினுலும் உயர்ந்த அதிகாரத்தினுலும் மயங்கி கர்வங்கொண்டு கெட்டுப்போகாதபடி நாடோறும் அந்த அறைக்குட்போய்த் தனது பழைய கோலையும், குழலையும், துணியையும்பார்த்து, பூர்வஸ்திதியை ஞாபகப்படுத்திக்கொண்டுவந்தான். தனக்குக் கேடுநினைந்த சத்துருக்களுக்கு அவன் கேடுநினைக்கவுமில்லை; அரசனுடைய ஆக்கினை அவர்கள்மேல் வரவிடவுமில்லை; தனக்காவது தன்னுடைய இனத்தாருக்காவது திரவியத்தைத் தேடிவைக்கவுமில்லை.

அவரவர்கள் தங்களுக்கு இயல்பான ஸ்திதியில் திர்ப்தியடைந்து வாழ்வதைப்போல அதிக நிச்சயமும் பாக்கியமுமான வாழ்வு வேறில்லையென்று அவன் எண்ணினபடியால், தன் இனத்தார் ஆடுமேய்க்கிற தொழிலை விட்டுவிடாதபடிக்குச் செய்து, அவர்களுக்கு அவசியம் தேவையான அளவுமாத்திரம் உதவிசெய்து காப்பாற்றிவந்தான். அவன் அநேகருக்கு நல்ல உபகாரியாயிருந்து மிகுந்த வயதுசென்றவனாகி மரித்தான்.

அர்த்தசாஸ்திரம்.

(தொடர்ச்சி.)

மூன்றுவது: தேசத்தில் முயற்சி அதிகரிக்கவேண்டுமானால், ஜனங்களுக்குள் அறிவு பெருகுவதற்கேற்ற வழிவகைகள் அநேகமிருக்கவேண்டும்.

அறிவினளவிற்குத்தக்கபடிதான் முயற்சினளவுமிருக்குமென்பது [illegible] ஆட்சேபிக்கத்[illegible]த சத்திய[illegible]மாம். அமெரிக்காகண்டத்தின் வடகோடியிலுள்ள ஈந்தியர் சோம்பலில் பே[illegible]ர்போன மகா சோம்பேறிகளாம். வீட்டில் சாப்பாட்டுக்கு இருந்[illegible]ால் வெளியே போகார்கள், யாதொரு வேலையுஞ்செய்யார்கள்; எத்[illegible]னை நாளாகிலும் வீட்டில் சும்மா குந்தியிருந்து, குளிர்காய்ந்து[illegible]கொண்டு காலம் போக்குவார்கள். வீட்டிலுள்ளது உரியது எல்[illegible]ாம் போய், பசிவந்து வாட்டினால்தான் வேட்டைக்குப்போவ[illegible]ர்கள். போனாலும் அச்சமயத்திற்கு அவசியம் தேவையான அ[illegible]ளவுமாத்திரம் சம்பாதித்துக்கொண்டு இல்லிடம்வந்து சேருவார்க[illegible]ளயல்லாமல், அதிகம் ஒன்றும் தேடார்கள். விடுசேர்ந்தபின்பு [illegible]றுபடியும் சோம்பலில் விழ்வார்கள். இதற்கெல்லாம் அந்த ஜ[illegible]ங்களுடைய அறிவீனமே முக்கியகாரணமாம். முயற்சிசெய்து தங்களுடைய காரியாதிகளை நன்றாய் நடத்திக்கொள்ளத்தக்க வழிவகைகள் யாதொன்றும் அவர்களுக்குள் இல்லை. அ[illegible]பும் வில்லுந்தவிர, வேறோர் ஆயுதமும் அறியார்கள். வேட்டையாடப்பட்ட மிருகத்தின் தோலையுரித்துப் போர்த்துக்கொள்ளுகிறதைத்தவிர, வேறெவ்வகையான உடையுஞ் செய்யத்தெரியாது. வாழ்வுக்கு அவசியமான பலவகைப்பட்ட பொருட்களைச் சம்பாதிக்கும்படி முயலவேண்டுமென்கிற தாற்பரியம் அவர்களுக்கு இல்லை.

ஆனால் பரோபகார சிந்தையுள்ள அறிவாளியொருவன் அவர்கள் நடுவே போய், அவர்களுக்கு இன்னின்ன முயற்சியினால் இன்னின்ன நன்மைகள் உண்டாகுமென்று காண்பிப்பானாகில், உடனே அவர்கள் உள்ளத்தில் அவ்வகை முயற்சியைப்பற்றி ஆசைபிறக்கும். துப்பாக்கியின் பிரயோஜனமின்னதென்றும், அதை முப்பது மிருகத்தின் தோலுக்கு வாங்கலாமென்றும் அவர்களில் ஒருவனுக்குத் தெரிவிப்பாயாகில், அவன் என்ன பிரயாசப்பட்டாகிலும் அவ்வளவு தோல்களையுஞ் சம்பாதித்துத் துப்பாக்கியை விலைக்குவாங்க முயற்சிசெய்வான் என்பதற்குச் சந்தேகமில்லை. அவன் பின்னும் சற்றதிக முயற்சிசெய்தால் அதுகொண்டு கோடரி, வாள் முதலிய ஆயுதங்களைச் சம்பாதிக்கலாமென்று அறிந்துகொள்வானாகில், அப்படியே அவன் முயற்சிசெய்து அந்த ஆயுதங்களையும் சௌதரிக்கத் துணிவான் என்பது நிச்சயம். இவ்வாறே வீட்டுச்சாமான், தட்டுமுட்டுகள், வஸ்திரங்கள் முதலிய இல்வாழ்க்கைக்குத் தேவையான பலவகைப் பொருட்களையும்பற்றி அவன் அறிகிற அறிவின் அளவுக்குத்தக்கதாக, அவனுள்ளத்தில் ஆசையும் முயற்சிக்கு ஏவுதலுமுண்டாகும். ஆகவே, நாளுக்குநாள் முயற்சியும் அதிகரிக்குமென்பதற்கு ஐயமில்லை.

ஆதலால் காரியத்தை நன்றாய் யோசித்துப் பார்க்கும்போது, ஒருவனிடத்திலுண்டாகிற முயற்சிகளெல்லாம் அவனுடைய அறிவின் பயனேயென்று விளங்கும். இப்பொழுது அந்த வட அமெரிக்கா ஈந்தியருக்குள் முன்னிலும் சற்றதிக அறிவுண்டாயிருக்கிறதினால் அவர்கள் முன்னிலும் அதிக முயற்சியுடையவர்களாயிருக்கிறார்கள். முயற்சியினால் வரக்கூடிய நன்மைகள் இவையென்று அவர்கள் கண்டுணரும்படி அறிவானது அவர்கள் கண்களைத் திறந்துவிட்டது. ஆகையால் அவர்கள் அந்நன்மைகளை அடையும்பொருட்டு முயற்சிசெய்துவருகிறார்கள். இந்த ஈந்தியா ஜாதியாரைக்குறித்துச் சொன்னதுபோலே மற்றெந்த ஜாதியாரைக்குறித்துஞ் சொல்லலாம். முயற்சியினால் வரும் நன்மைகள் இன்னின்னவென்று ஒரு ஜாதியார் அறிந்திருக்கிற அறிவினளவாகவே அவர்கள் முயற்சியுமிருக்குமென்பது கண்ணாரக் காணக்கூடிய விஷயமே. "நீரளவேயாகும் நீராம்பல்போல" அறிவளவேயாகும் முயற்சியென்று சொல்லில் ஒத்திருக்குமேயோ

ழிய தவருகாது. ஒருவனை அல்லது ஒரு ஜாதியானா -முயற்சிக்குத் தூண்டத்தக்க ஏவுதல்கள் அறிவினால் ஜனிக்குமேயன்றி அறிவீனத்தினாலுண்டாகா. இந்த ஏவுதல்களின் பலமெவ்வளவோ அவ்வளவுதான் அவற்றினின்று பிறக்குமுயற்சியின் விருத்தியுமிருக்கும்.

முயற்சியின்பேரில் ஒருவனுக்கு எவ்வளவு ஆசையிருந்தபோதிலும், அதைச் செய்யும் வகையைப்பற்றி அவனிடத்தில் போதும்மான அறிவு இல்லாவிட்டால் முயற்சி நடவாது. அரைகுறையான அறிவினால் முயற்சிக்குத் தகுந்தபலன் அகப்படாமல் மெத்தக் குறைந்துபோம். பலன் குறையவே, ஊக்கமுங் குறைந்து மனமும் தளர்ந்துபோம். திருஷ்டாந்தமாக, ஒருமனுஷனுக்குக் கொஞ்சம் நிலமிருக்கிறதென்றும், அதைப் பயிரிட்டால் அதன் வரும்படியானது, தான் சௌக்கியமாய் வாழ்ந்திருக்கப் போதுமானதென அவன் நன்ருய் அறிந்திருக்கிறுனென்றும் வைத்துக்கொள்வோம். இது அம்மனுஷனை முயற்சிக்குத் தூண்டிவிடுவதற்குத் தகுந்த ஏவுதல்தானென்று யாவரும் ஒத்துக்கொள்வார்கள். ஆயினும் அவனுக்கு உழுதல், எருப்போடுதல், பயிர்செய்தல் முதலிய விபசாயத்தொழிலொன்றும் தெரியாதிருந்தால், அவன் முயற்சி செய்யத் துவங்குகிறது எப்படி? ஆசையுமனமுமிருந்தால்மாத்திரம் போதுமா? அதற்குத் தகுந்த அறிவும் விவேகமுங்கூட இருக்கவேண்டியது அவசியமே. அப்போதுதான் முயற்சிசெய்வதற்கும் பலன் அடைவதற்கும் வகையுண்டு.

காரியம் இப்படியிருப்பதால், எவ்வகை முயற்சிசெய்கிறவர்களுக்கும் அவ்வகை முயற்சிக்கு அநுகூலமான அறிவு அவசியம் வேண்டியதென்று ஏற்படுகிறது. சமுசாரிக்கு நிலத்தியல்பு, எருவியல்பு, வித்தியல்பு, பலன்படப் பயிர்செய்யும் வகை முதலிய பல காரியங்களும் தெரியவேண்டும். தொழிலாளியானவன் தன் தொழிலோடு சம்பந்தப்பட்ட சகல விஷயங்களையும் அறியவேண்டும். தச்சன் கொல்லன் முதலியோர் தங்கள் தொழில்களுக்குரிய விதிமுறைகளைக் கற்று அவற்றிற் பழகவேண்டும். வர்த்தகர்கள் தாங்கள் வர்த்தகஞ்செய்யும் பொருட்களின் வரலாறுகளையும், அவைகள் அகப்படும் இடங்களையும், அவைகளுக்குப் பதிலாக மாற்றிக்கொள்ளும் பொருட்களையும்பற்றி நன்ருய் அறியவேண்டும். இவ்வகை அறிவல்லாமலும், வர்த்

தக முயற்சியுடையோரெவரும் நன்றாய் எழுதவும், வாசிக்கவும், கணக்குப்பார்க்கவும் கற்கவேண்டும. .கல்விகற்றிருந்தால் ஒருவன் தனக்கும், தன்னுடன் கொடுக்கல்வாங்கல் முதலிய விஷயங்களிற் சம்பந்தப்படுகிற பிறருக்கும் நஷ்டம்வராமல் காரியங்களை யதார்த்தமாயும் கருராயும் நடப்பிக்கவும், தூரமான இடங்களிலுள்ளவர்களுக்கு தன் கருத்துகளைத் தெரிவித்து அவர்கள் அபிப்பிராயங்களை அறிந்துகொள்ளவும், பின்னுக்குப் பயன்படத்தக்க பலகாரியங்களை மறந்துபோகாதபடி எழுதிவைத்துக் கொள்ளவும் ஏதுவுண்டு.

இந்த அறிவெல்லாம் பாரிக் குடித்தனக்காரர், பெரிய வர்த்தகர்கள், முதலாளிமார் என்றிவர்களுக்கு வேண்டியதேயல்லாது, அன்றாடக ஜீவனத்துக்காகக் கவலைப்படுகிற வேலைக்காரர் கூலியாட்கள்முதலிய ஏழைஜனங்களுக்கு அவசியமில்லையென்று சொல்வது பிசகு. அறிவு யாவர்க்கும் அவசியம். அதனால் எல்லோர்க்கும் நன்மையுண்டு. வயலில் கூலிவேலைசெய்கிற ஒருவன், அந்த வேலைக்கூறு தெரிந்துசெய்கிற அறிவாளியாயிருந்தால், அவன் அஃதறியாத உழவனைப்பார்க்கிலும் அதிகக் கூலிபெறுவான். கடையில் அலுவல்பார்க்கிற ஒருவன், வியாபார முறைதெரிந்து நடக்கிற அறிவாளியாயிருந்தால், அவன் அதற்காக மற்றவர்களிலும் அதிக சம்பளம் பெறுவான் என்பதற்கு ஐயமுண்டா? அவ்வாறே எந்த வேலையிலும் அறிவுள்ளவன் அதிக வரும்படி செய்து கொள்வானென்பது நிச்சயம். அல்லாமலும் அறிவாளி நாளுக்கு நாள் படிப்படியாய் உயர்ந்து, மேலான உத்தியோகத்தையும் கீர்த்தியையும் அடைகிறன். விபசாயத்தொழில் நன்றாய் அறிந்த கூலிக்காரன் வெகு லேசாய் சமுசாரியாகிவிடுகிறன். வியாபார விஷயத்தில் நல்ல அறிவும் புத்தியுமுள்ள கணக்கன், சீக்கிரத்தில் முதலாளி ஸ்தானத்திற்கு வந்துவிடக் காண்கிறோம். அப்படியே எந்தத் தொழிலிலும் அந்த தொழிலறிந்தவனுக்கு அதிக மேன்மையும் வரும்படியுமுண்டென்பது பிரத்தியட்சம். ஆதலால் அறிவானது எத்திறத்தவருக்கும் உபயோகமுள்ளதென்பது யதார்த்தமே. அன்றியும் அறிந்து தொழில்செய்வதில் மனது விருத்தியடைந்து புத்திவளரும். செய்தொழிலின் தன்மை அறியாமல் குருட்டுத்தனமாய் பாவையைப்போல வேலைசெய்தால், மனதிற்கு யாதொரு தேர்ச்சியும் ஆனந்தமுமுண்டாகா. ஒரு சாஸ்திரி ஓர்

அறைக்குள் நின்று இரண்டொருஜாண் நீளமுள்ள சில கருவிக ளைக்கொண்டு நீராவியின் தன்மையையும் அதன் செய்கையையும் விளக்கிக்காட்டுவானாகில், நாம் அதை எவ்வளவு பிரயோஜனமான காரியமென்று புகழ்ந்துகொண்டாடுகிறோம். அப்படியானால் நீராவியந்திரத்தின் விபரமனைத்தும நன்குணர்ந்த மாலுமி ஒரு வன், புகைக்கப்பலில் நின்று நாள்முழுதும் அந்த யந்திரத்திலே வேலைசெய்வானாகில், அது எவ்வளவு பிரயோஜனமான செய்கை. அதனால் அவனுடைய மனது எவ்வளவுதூரம் விர்த்தியடைந்து மேன்மேலும் நூதனோபாயங்களைக் கண்டுபிடிக்கத்தக்கது. இது வன்றி அவன் அதன் விபரமொன்றுமறியாமல் பழக்கத்தினால் மாத்திரம் அதில் சில வேலைகள் செய்வானாகில், அவனுக்கும் அந்த யந்திரத்தில் நெருப்புமூட்ட விறகு எடுத்துப்போடும் மடைய னுக்கும் வித்தியாசமே இல்லை. ஆதலால் எப்படிப்பார்த்தாலும் அறிவானது எத்தொழில் செய்வோர்க்கும் அவசியமும் பிரயோ ஜனமுமானதென்று ஏற்படுகிறது.

இந்த அறிவு ஜனங்களுக்குள் பரம்பவேண்டுமானால் முத லாவது ஒவ்வொருவரும் எழுத, வாசிக்க, கணக்குத்தீர எப்படி யாவது படித்திருக்கவேண்டும். இம்மூன்று காரியமும் முந்தித் தெரிந்தால்தான் அப்புறம் அந்தந்த வேலையிற் பிரவேசிக்கும் போது, அததற்குரிய அறிவை அடைய ஏதுவுண்டு. ஒரு வேலை யைப்பற்றிய அறிவு அடைந்தவனுக்கு, மறுவேலையைப்பற்றிய அறிவு வருகிறது கஷ்டமல்ல. எடுத்தவேலையை அதன் இயல் பறிந்து செய்கிற மனுஷன் சீக்கிரத்தில் கெட்டிக்காரனென்று பேரெடுத்து, தகுந்த வரும்படிதேடி திரண்ட ஆஸ்திமானுவானெ ன்பதற்குச் சந்தேகமில்லை. இதற்குச் சில திருஷ்டாந்தங்கள் சொல்லுகிறோம்: அச்சாபிஸில் எழுத்துப்பொறுக்கிற ஓர் ஏழை யுடைய மகனான (Franklin) பிராங்க்லின் என்பவர் அறிவினால் மகா சாஸ்திரியாகிவிட்டார். அம்பட்டன் மகனாய்ப்பிறந்த (Sir R. Arkwright) ஆர்கைரட் அங்கிலேயதேசத்தில் அதிபிர பலமடைந்து பிரபுக்கள் வரிசையிற் சேர்ந்ததும் அறிவினாலேயே. சொல்லவேண்டுமானால், முயற்சியினால் முன்னுக்குவந்து கீர்த்தி யடைந்த மகான்களெல்லாம் மிகவும் தாழ்ந்த ஸ்திதியிலிருந்தே படிப்படியாய் உயர்ந்துவந்தவர்களென்பதற்குச் சந்தேகமில்லை. இதெல்லாம் அறிவின் பயனேயொழிய வேறென்ன?

• ஆதலால் நகரங்களில்மாத்திரமல்ல, நாடுகளிலும் கிராமங்களிலும் பள்ளிக்கூடங்கள் பாடசாலைகள் ஸ்தாபித்து சகலரும் படித்துப் பயனடையும்படி ஒழுங்குசெய்வது தேசவாழ்விற்கு அநுகூலமாம். எத்தேசத்திலும் சொந்தசசெலவில் கல்விகற்க வகையில்லாதவர்கள் பெரும்பான்மையோராயிருப்பதினால், அவர்களுக்கும் மற்ற யாவருக்கும் உபயோகமாக துரைத்தனத்தார், தர்மசங்கத்தார், பரோபகார சிந்தையுள்ள பிரபுக்கள் முதலியோர் பள்ளிக்கூட முதலியவைகளை ஏற்படுத்தி நடத்திவரவேண்டும். லோகோபகாரமான இந்த நல்விஷயத்திற்கு ஒவ்வொருவரும் அவராலியன்ற உதவிசெய்யவேண்டும். அப்படிச் செய்தால் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப ஒவ்வொருவருக்கும் பாத்தியமுண்டு. இந்த ஏற்பாடு தனவான்களுடைய பிள்ளைகளுக்கு அவ்வளவு அவசரமில்லையென்றாலும், நடுத்தரமானவர்களுக்கும் ஏழைகளுக்கும் மிகுந்த பிரயோஜனமுள்ளது. எப்படியெனில், இவர்கள் செல்வர்களைப்போல் சொந்தச்செலவில் தங்கள் பிள்ளைகளைப் படிப்பிக்க வகையுமில்லை; எல்லோரும் ஒன்றுசேர்ந்து பணஞ்சேகரித்துப் பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்து நடத்துவதும், லேசல்ல. ஆதலால் இதுவிஷயத்தில் துரைத்தனத்தார் தாமே வேண்டிய அநுகூலங்களெல்லாஞ்செய்து தேசத்தில் கல்வி பரம்பும்படி செய்யவேண்டும்.

மேற்கூறிய சாதாரண பள்ளிக்கூடங்கள் பாடசாலைகள் அல்லாமலும், பலவகையான சாஸ்திரங்களைப் படிப்பிப்பதற்கு சர்வகலாசாலைகளும் சாஸ்திரகூடங்களுமிருக்கவேண்டும். எழுதவாசிக்கத் தெரிந்தவுடனே, அலுவலில் பிரவேசிக்க விரும்புகிறவர்கள்போக, பின்னும் கல்விகறறுத் தேற மனமும் வகையுமுள்ளவர்களுக்கு இது அவசியம். சாஸ்திரங்களின் ஆதாரப்பிரமாணங்களை இளமையில் கற்றிருந்தால்தான் அப்புறம் அந்த அறிவை விருத்திசெய்து பலனடைய இடமுண்டு. பெரியஆளாய் வளர்ந்தபின்பு ஒரு சாஸ்திரத்தை ஆரம்பித்துப் படிக்கிறது பெரும்பாலும் கூடாதகாரியமாம். ஏகதேசம் கூடினாலும் அதற்குப் போதுமானகாலஞ் செலவழித்துப் பயனடையத்தக்கதாகப் படித்துத் தேறுவது லேசல்ல. ஆதலால் எந்த சாஸ்திரத்தையும் இளமையிலேயே ஆரம்பித்து, அதன் ஆதாரப் பிரமாணங்களை அறிந்திருந்தால்தான் பின்னுக்கு அதனால் பலனடையலாம். அப்படிப்பட்ட

அறிவை அடைவதற்கு சாஸ்திராப்பியாசம் செய்யும் சர்வகலா சாலை முதலிய இடங்கள் மிகவும் அவசியமாம். இவ்வாறு கல்வி விருத்தியாவதற்கேற்ற காரியங்கள் பொதுவில் செய்யப்படுமானால், தேசத்திலுள்ள சகலமானபேர்களும சொற்பசெலவில் பெரும்பயனுள்ள கல்விகளைக் கற்றுக்கொள்ள ஏதுவுண்டு. அதனால் முயற்சிக்கு அநுகூலமும் தேசத்திற்கு நல்வாழ்வுமுண்டாகும்.

இதுவரையும் விளக்கிக்காட்டிய நியாயங்களினால் ஏற்படுகிற பிரமாணங்களைவையெனில்,

முதலாவது: இவ்வுலகில் பிரயோஜனமுள்ளதொன்றைப் பிரயாசையின்றி அடைதலரிது என்பதும்;

இரண்டாவது: பிரயோஜனப்படத்தக்க முயற்சி எதுவும் அறிவினாலாகவேண்டுமேயொழியப் பிறிதில்லை என்பதும்;

மூன்றாவது: கடவுள் மனிதனை முயற்சிக்குத் தூண்டிவிடும்படி முயற்சியுடையோர்க்கு மிகுந்த பலனையும், சோம்பேறிகளுக்குக் கொடிய துன்பத்தையும் விதித்திருக்கிறானென்பதும்;

நான்காவது: தேவ அமைப்பு இப்படியிருப்பதால், நாம் அதற்கு விரோதமொன்றுஞ் செய்யாமல், அவரவர் தம்தம் இஷ்டப்படி நியாயமானவழியில் முயற்சிசெய்து பலனடையும்படி இடங்கொடுப்பதும், ஒவ்வொருவரும் தம்தம் உடைமையை தம்தம் மனப்படிப் பிறருக்குச் சங்கடம் நஷ்டமொன்றும் வாராமல் அநுபவித்துக்கொள்ள விடுவதும் நியாயமென்பதும்;

ஐந்தாவது: ஒருவன் சம்பாதித்ததெல்லாம் அவனுக்கே உரிமையாயிருக்கிறது எப்படி நியாயமோ, அப்படியே ஒருவன் சம்பாதியாததொன்றும் அவனுக்கு உரிமையாகப்படாதென்பதும்;

ஆறாவது: ஒவ்வொருவரும் முயற்சிசெய்யவேண்டிய வகையை நன்குணர்ந்து அதைச் செம்மையாய்ச் செய்து தகுந்த பலனடைந்து வாழும்படி அவரவராகியன்றமட்டும் கல்விகற்று அறிவில் தேறவேண்டியது அவசியமென்பதுமேயாம்.

இந்தப் பிரமாணங்களை ஒரு தேசத்தார் அல்லது ஒரு கூட்டத்தார் கைக்கொள்ளுகிற அளவுக்குத்தக்கபடிதான் அவர்களுடைய முயற்சியும் வாழ்வுமிருக்கும்.

J. V. Subramanya Aiyar, B.A.
Bellary.

தெய்வச்செயலின் நீதி.

ஓர் உன்னத மலையின்மேல் சந்நியாசி ஒருவன் வாசஞ்செய்து கொண்டிருந்தான். அவன் இப்பிரபஞ்சத்தில் நடக்குங்காரியங்களைக் கவனித்துப் பார்க்குங்கால் அடிக்கடி துன்மார்க்கர் தங்களுக்கு வரவேண்டிய தெண்டனைக்குத் தப்பிச் சுகம் அநுபவித்து வருகிறதையும், சன்மார்க்கர் தங்கள் தர்மத்துக்குரிய பலனை அநுபவியாமல் துன்பத்துக்குட்படுகிறதையும் கண்டு திகைத்து, இப்பிரபஞ்சத்தை ஆளுகிறவர் பூரண நீதியுள்ளவரானால் இவ்வித காரியங்கள் உலகத்தில் நடப்பதெப்படியென்று பல சந்தேகங்களுக்கிடங்கொடுத்து, மனவருத்தமடைந்து, தனக்குள்ள ஐயத்தையும் மனக்கலக்கத்தையும் நிவிர்த்திசெய்யவேண்டுமென்று கடவுளை நோக்கி அல்லலும் பகலும் பிரார்த்தித்துத் தவசுசெய்து கொண்டிருந்தான். இப்படி இருக்குங்காலத்தில், ஓர்நாள் அவன் தன் ஆசிரமத்தில் உட்கார்ந்துகொண்டு, அம்மலை அடிவாரத்திலுள்ள ஓர் சுனை நீரோட்டத்தைநோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது ஓர் மனிதன் குதிரைமேலேறி விடாய்த்தவனாய் அச்சுனையினிடத்தில் வந்துசேர்ந்து, குதிரையைவிட்டுக் கீழே இறங்கித் தன் தோளில் மாட்டியிருந்த பையைக் கழற்றிக் கரையின் பேரில் ஓர் ஒதுக்கிடமானவிடத்தில் வைத்துவிட்டு, தண்ணீர் அள்ளிக் குடித்துத் தாகசாந்திசெய்து, இளைப்பாறிக்கொண்டுத் திரும்பிப்போகையில் பொன்காசு நிறைந்த தன் பையை எடுக்க மறந்து குதிரைமேலேறி வேகமாய்ப் போய்விட்டான். அவன் போன சற்றுநேரத்துக்குள் வேறொரு பிரயாணி களைத்தவனாய்த் தண்ணீர்குடிக்க அங்கு வந்தபோது பொன்காசு நிறைந்த பையைக் கண்டு, பொட்டளவெடுத்துப் பதுக்கிக்கொண்டு தீவிரமாய் நடந்து விட்டான். அப்பால் விறகுவெட்டி ஒருவன் காடெங்கும் அலைந்து திரிந்து, வெகு வருத்தத்தோடு விறகுகளை வெட்டி பெருஞ்சுமையொன்றைத் தன் தலையின்மேல் சுமந்துகொண்டு, விடாய்த்தவனாய் அச்சுனைக்கு வந்து சுமையை இறக்கிப்போட்டுவிட்டுத் தண்ணீர் அள்ளிச் சாப்பிட்டு, தன் பெரும் ஆயாசந்தீரக் கரையின்பேரில் சற்றுநேரம் படுத்திருந்தான். இச்சமயத்தில் முன்

குதிரையேறிவந்த மனிதன் அவ்விடத்திற்கு ஆத்திரத்தோடே திரும்பிவந்து, அங்கே விறகுவெட்டியைத்தவிர வேறொருவரையுங்காணுமல், அவனைப்பார்த்து: நான் இங்கு வைத்துவிட்டுப்போன பணப்பை எங்கேயென்முன்? அதற்கவன்: நான் ஒன்றும் அறியேனென்முன். தட்சணம் அம்மனிதன் கோபாவேசங்கொண்டு தன் பட்டயத்தை உருவி விறகுவெட்டியை வெட்டொன்று துண்டம் இரண்டாக வெட்டிப்போட்டு, அவன் மூட்டை முடிச்சுகளைச் சோதித்துப்பார்த்து, தன் பணப்பையைத் தேடியுங் காணுமையால் வெறுமையே திரும்பிப் போய் விட்டான்.

அப்போது இதையெல்லாங் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்த சந்நியாசியானவன் பெருமூச்செறிந்து: ஆ, தெய்வமே! ஒன்றுமறியாத ஏழை ஒருவன் அநியாயமாய்த் தன் உயிரைப் பறிகொடுத்தானே. இதென்ன விபரீதம்! இதென்ன அநியாயம்! பணத்தைக் கைப்பற்றிப்போனவன் ஒருவனிருக்க, குற்றமில்லாதவன் கொலையுண்டானேயென்று மனம்பதறி நாக்குளறிப் புலம்பினுன். இச் சமயத்தில் தெய்வவாக்கு அசரீரியாய்ப் பிறந்து: ஓ, சந்நியாசி! இதைப்பற்றி உனக்கென்ன கவலை, நீ உன் தவசில் தரித்திரு. இப் பிரபஞ்ச ஆளுகைக்குரிய காரியங்கள் உன்னுடையதல்லவே. சர்வலோகத்தையும் படைத்தளித்து ஆளுகிறவரும், சர்வஞானமுள்ளவருமாகிய கடவுளுடைய திருச்செயலை உனது சிற்றறிவினுல் அளந்தறியலாமென்று நினைக்கின்முயோ? இது மதியீனம். அவருடைய செயல் உன் மேல்பார்வைக்கு எப்படித் தோன்றினுலும் அதைப்பற்றி உன் மனதில் ஒருபோதும் சந்தேகத்திற்கு இடங்கொடாதே. சர்வலோகாதிபதியானவர் ஓர் அணுவளவாவது பழுதற்ற நீதிபரரென்பதைமாத்திரம் உன் மனதில் ஸ்திரமாய் வைத்துக்கொள். அவர் இவ்வுலகத்தை ஆளும்விதம் நேர்முகமாயல்ல, மறைமுகமாயிருக்கின்றது. கருவிகளையும் ஏதுக்களையுங்கொண்டே தமது சித்தத்தை நடப்பித்துவருகிருர். மாந்தர் இக்காரியத்தைக் கிரகித்துக்கொள்ளாததினுல், அவருடைய திவ்ய லட்சணங்களையும் அவரது அதிசயசெயல்களையும் அறியாமல் ஐயமுறுகின்முர்கள். இது தப்பிதம். நீ இப்பொழுது கண்ட காட்சியைப்பார்க்கிலும் விபரீதமும் விகற்பமுமானது உலகத்தில் வேறென்ன இருக்கிறது. ஆகிலும் நீ அதன் கருத்தை உணர்வாயா

ஞல், சர்வலோக கர்த்தாவாகிய கடவுள் ... றே சொல்லி அவரை அத்தியந்தபணிவாய்த் ... கருத்தைச் சொல்லுகிறேன் கேள்:

சுனையோரத்தில் பணத்தைக் கண்டெடுத்துப்போ... னெனில், அநேக வருஷங்களுக்குமுன் அம்மனிதனு... பனின் ஆஸ்தியை சுனையண்டையில் குதிரையேறிவந்து ... பணப்பையை இழந்த மனிதனுடைய தகப்பனுனவன் அநியாயமாய் அபகரித்துக்கொண்டான். ஆகையால் நாம் இச்சமயத்தில் குதிரையேறி வந்தவனுடைய பணம், இரண்டாவது சுனையினிடம் வந்த பிரயாணி கையில் சிக்கும்படி செய்தோம். மேலும் கொஞ்சக்காலத்துக்குமுன் விறகுவெட்டியானவன் குதிரையேறி வந்தவனுடைய தகப்பனைக் காட்டில் தனிமையாய்ப் போகக்கண்டு, அவனிடத்திலிருந்த பணத்தை அபகரித்துக்கொள்ளும்பொருட்டு அவனைக் கொலைசெய்திருந்தான். ஆகையால் அவனிடத்தில் பழிக்குப் பழிவாங்கும்படி குதிரையேறிக்கு இப்பொழுது இடங்கொடுத்தோம். ஓ, தபசி! காரியம் இப்படியிருப்பதினுல், முன்னும் பின்னுமுள்ள சகல காரியங்களையும் அறிய ஏதுவில்லாத நீ, தெய்வச்செயல்களைப்பற்றிச் சந்தேகங்கொள்ளும் மதியீனத்தை இது முதல் விட்டுவிடு என்று அசரீரிவாக்குப் பிறந்தது. இதைக் கேட்ட சந்நியாசி தன் மதியீனத்தை உணர்ந்து, அத்தியந்தபணிவாய்க் கடவுளுக்கு வணக்கஞ்செலுத்தி, அவரைநோக்கி: சர்வஞானமும் பூரணநீதியுமுள்ள கடவுள் நீரே; உமக்கு மறைவாயிருக்கும் இரகசியம் ஒன்றுமில்லை; உமது நாமம் என்றும் துதிக்கப்படுவதாக என்றான்.

ஆபிரிக்கா பிரயாணம்.

(தொடர்ச்சி.)

கா...பியா நதியைச்சேர்ந்த நாடுகளிலுள்ள ஜனங்கள் பீலுப்ஸ் ஜாலோப்ஸ், பவுலாஸ், மாண்டிங்கோ என நான்குவகுப்புகளாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இச்சனங்களுக்குள் மகம்மதுமார்க்கம் வெகுதூரம் பரம்பியிருக்கிறது. ஆகிலும் அவர்களில் பெரும்பான்மையோர் தங்கள் முன்னோர்களின் விக்கிராராதனைக்குரிய வழக்கங்களையே அநுசரித்துவருகிறார்கள். இவ்வித ஜனங்

...ப்பிரிகள் அல்லது அவிசுவாசிகளென்று ...ர்கள்.

...என்னும் ஜாதியாருக்குள் பழிக்குப்பழிவாங்கும் ...சேஷமாயுள்ளது. ஒருவனுக்கு மற்றொருவன் ஓர் ...ருந்தால், அவன் எவ்விதத்திலும் எக்காலத்திலாகிலும் ...மைக்குத் தீமை பதிற்செய்து தீர்க்கவே பிரயாசப்படுவான். அவன் தன் ஜீவகாலத்திற்குள் இப்படிச் செய்துமுடிக்கத் தவறிப்போனால், தனக்குப் பின்னுள்ள பிள்ளைகள் அல்லது பிள்ளைகளின் பிள்ளைகளாவது தனக்குப் பதிலாக எதிரியிடத்தில் பழிவாங்கும்படிக்கு அவர்களை ஏவிவிட்டு இறந்துபோவான். இவ்வாறு பாரம்பரையாய்ப் புத்திரபவுத்திரர்கள் தங்கள் முன்னோர்களுக்குத் தீமைசெய்தவர்களைப் பகைத்து அவர்களுக்குப் பதில்தீமை செய்வது தங்கள்பேரில் விழுந்த பெரியகடமையெனப் பாவிப்பார்கள். இப்படியே அவர்கள் தங்கள் வர்மத்தை அநேக தலைமுறைமட்டும் விடாது பாராட்டிச் சலஞ்சாதித்துவருவார்கள். இவ்வாறு இந்த ஜனங்கள் பழிவாங்குகிற விஷயத்தில் காட்டிவருகிற கன்னகடோகுணத்தை நாம் நினைக்கும்போது மிகவும் துக்கப்படவேண்டியதாயிருக்கிறது. ஏனெனில், மற்ற விஷயங்களில் இந்த ஜனங்களிடம் அநேக நற்குணங்களிருப்பதைக் காணலாம். தங்களுக்கு உபகாரஞ்செய்தவர்களிடத்தில் இந்த ஜாதியார் மிகுந்த நன்றியறியுதலையும் பட்சத்தையும் பாராட்டுகிறார்கள். அவர்கள் நம்பிக்கைத் துரோகஞ்செய்யார்கள். தங்களிடத்தில் அடைக்கலமென்று ஒப்புவிக்கப்பட்ட பொருளை அணுவளவும் மோசம் பண்ணாமல் உண்மையோடு காப்பாற்றிவைத்திருந்துக் கடைசியில் உடையவர்களிடத்தில் ஒப்புவிப்பார்கள். திருஷ்டாந்தமாக: அங்கிலேயருக்கும் பிரான்ஸியருக்கும் யுத்தம் நேரிட்டிருந்தகாலத்தில், பிரான்ஸியரின் யுத்தக்கப்பல்கள் ஆபிரிக்காகரையோரத்திலிருந்த அங்கிலேய கப்பல்களோடு போர்செய்யுஞ்சமயங்களில் பீலூப்ஸ் ஜாதியார் தங்கள் சிநேகிதர்களாகி இங்கிலீஷ்காரர் பட்சத்திலே உறுதியாக நின்று பிரான்ஸுக்காரருக்கு விரோதமாய்ச் சண்டைசெய்திருக்கிறார்கள். ஒரு சமயத்தில் அங்கிலேயர் தங்கள் வியாபாரஸ்தானமாகிய வின்டேன்பட்டணத்தில் தங்களுக்கிருந்த விஸ்தாரமான சொத்துக்களை பீலூப்ஸ் ஜாதியார் வசத்தில் ஒப்புவித்துவிட்டு, பிரான்ஸியருக்குப் பயந்து

ஊனைவிட்டு ஓடினபோது, அவர்கள் திரும்பி
சாதியார் அச்சொத்துக்களைக் கிஞ்சித்தும் அப
உண்மையோடு பத்திரப்படுத்திவைத்திருந்து, கடை
தக்காரரிடம் ஒப்புவித்துவிட்டார்கள். இவ்வளவு பி
உண்மையுமுள்ள ஜனங்களிடத்தில் குற்றங்களை க்ஷமித்
கம்பாராட்டுகிற குணம் இருக்குமானால் எவ்வளவு நல்ல
மாயிருக்கும்.

ஜாலோப்ஸ் ஜாதியார் காம்பியாநதியைச் சேர்ந்த மாண்டிங்கோ நாடுகளுக்கும் ஸினிகல் நதிக்கும் இடையிலுள்ள தேசத்தில் வா சஞ்செய்யும் ஜனங்கள். இவர்கள் மிகுந்த முயற்சியுள்ளவர்களும் பலம்பொருந்தியவர்களும் யுத்தப்பிரியருமானவர்கள். இவர்கள் மாண்டிங்கோ நாடுகளுக்குச் சமீபத்தில் குடியிருக்கிறவர்களாயினும், பாஷை, முகச்சாயல் முதலியவற்றில் மாண்டிங்கோ ஜாதியாருக்கு வித்தியாசமுள்ளவர்கள். மற்ற ஆபிரிக்கானைப்போல ஜாலோப்ஸ் ஜாதியாரின் மூக்கு அவ்வளவு தட்டையானதல்ல; அவர்கள் உதடுகள் அவ்வளவு தடிப்பானவைகளுமல்ல. அவர்கள் நிறம் அட்டக்கரிபோல மிகவும் கறுப்பாயிருந்தபோதிலும், அவர்கள் நிகரோ ஜாதியாருக்குள்ளெல்லாம் மிகுந்த சவுந்தரியமுள்ளவர்களென்று வெள்ளைக்காரராகிய வியாபாரிகளால் எண்ணப்பட்டுவருகிறார்கள். ஜாலோப்ஸ் ஜாதியார் வெவ்வேறு சுயாதீன ராஜ்யத்தாராகப் பிரிந்து ஒருவரையொருவர் எதிர்த்து ஓயாமல் யுத்தங்கள்செய்துவருகிறார்கள். நடைஉடை பாவனைகளில் இவர்கள் மாண்டிங்கோ ஜாதியாருக்கு ஒப்பானவர்கள். ஆயினும் அவர்களிலும் இவர்கள் கைத்தொழில்களில் அதிகத் தேர்ச்சியடைந்தவர்கள். இவர்களுடைய பாஷை விரிவும் பொருள்சிறப்புமுள்ளது. இவர்களில் ஓர் வகுப்பாராகிய பவுலாஸ் என்று அழைக்கப்படுகிற ஜனங்கள் மிதமான கறுப்புநிறமுள்ளவர்களும், பட்டுப்போன்ற மிருதுவான மயிரும் அழகிய முகரூபமுமுள்ளவர்கள். இவர்கள் விசேஷமாய்க் கடற்கரையோரங்களிலுள்ள நாடுகளில் வாசஞ்செய்து ஆடுமாடுகளை மேய்ப்பதும், நிலம் பயிர்செய்வதுமான தொழில்களை நடப்பித்து ஜீவனஞ்செய்கிறவர்கள். இவர்கள் தாங்கள் பயிர்செய்யும் நிலங்களுக்காக அந்தந்த நாட்டில் சிற்றரசுசெய்யும் அரசர்களுக்குப் பகுதிகட்டிவருவார்கள்.

ஜாதியார்.—இவர்கள் பெரும்பாலும் ஆபிரிக்கா
நாடுகளிலெல்லாம் வாசஞ்செய்கிற குடிகள். இவ
பாஷை விஸ்தாரமாய்ப் பரம்பியிருக்கிறது. இவர்
மும் சிநேகமும், உபசாரணைக்குணமுமுள்ளவர்கள். ஆ
ள் நல்ல உருவும் நடுத்தரப்பருமனும் கடினமான முயற்
ள நிர்வகிக்கத்தக்க தேகபலமுமுள்ளவர்கள். ஸ்திரீகள் சுகு
மும் பேச்சுநடைகளில் உச்சாகமும் இங்கிதமும் பொருந்திய
ர்கள். இச்சனங்கள் தாங்கள்தாமே நெய்துகொள்ளும் பருத்தி
னால் புடவைகளால் தங்களுக்கு உடைகளை உண்டுபண்ணிக்கொ
ள்வார்கள். ஆண்பிள்ளைகளுடைய உடை முழங்காலுக்குக் கீழே கொஞ்சதூரம் வரையில் எட்டும் சராய்களும், வெகுதாராளமாயிருக்கும் ஓர்வித மேல்அங்கியுமே. இச்சனங்கள் காலுக்குப் பாதகுறடுகளும் தலைக்குப் பருத்திப் புடவைகளினாலாகிய வெள்ளைக் குல்லாக்களுந் தரிப்பார்கள். பெண்களுடைய வஸ்திரம் என்னவெனில்: ௬ அடி நீளமும், ௩ அடி அகலமுமுள்ள இரண்டு துண்டுத்துணிகளே. இவற்றில் ஒன்றை ஸ்திரீகள் கணுக்கால்வரைக்கும் எட்டத்தக்கதாக அரையில் சுற்றிக்கொள்வார்கள்; மற்றொன்றை மார்புதோளின்பேரில் போட்டுக்கொள்வார்கள். ஆபிரிக்கா ஸ்திரீகளின் சிரசலங்காரம் நாட்டுக்குநாடு வேறுபட்டிருக்கும். காம்பியாநதியோரங்களில் வாசஞ்செய்யும் ஸ்திரீகள் இரண்டு மூன்று விரற்கடை அகலமும், வெகு நீளமுமான துணியைக்கொண்டு தங்கள் சிரசைச்சுற்றி அநேக சுற்றுக்களாய்ச் சுற்றிக்கொள்வார்கள். பாண்டோ என்னும் மாகாணத்தில் வாசஞ்செய்யும் ஸ்திரீகள் அநேக வெள்ளைப் பாசிமணிக் கோர்வைகளைச் சிரசில் சுற்றிக்கட்டிக்கொண்டு, நெற்றியின் மத்தியில் ஓர்வித பொற்றகடை அணிவார்கள். காஸோன்நாட்டில் பெண்கள் ஓர்ஜாதி வெள்ளைக்கிளிஞ்சல்களைக்கொண்டு தங்கள் சிரசை வெகு அலங்காரமாய்ச் சோடித்துக்கொள்வார்கள். கார்த்தா னூட்மார் என்னும் மாகாணங்களிலுள்ள ஸ்திரீகள் தங்கள் தலைமயிரை வாரி, உள்ளே [illegible]டுக்கயிறுவைத்து வெகு உயரமாகக் கொண்டைமுடித்து, ஓர்ஜாதிப் பவழங்களினால் கொண்டையை அலங்கரிப்பார்கள். இப்பவழங்களை மெக்காவுக்குப் போயிருந்து திரும்பிவரும் யாத்திரைக்காரர்கள் சிவந்தசமுத்திரத்தினின்று சேகரித்துவந்து உயர்ந்தகிரயங்களுக்கு விற்பார்கள்.

மாண்டிங்கோ ஜாதியார் ஆபிரிக்காகண்டத்தின் இப்பிராந்தி யங்களில் வசிக்கும் மற்ற ஜாதியார்களைப்போலவே மிகவும் சிறி தும் வசதியற்றதுமான வீடுகளைக் கட்டிக் குடியிருக்கிறார்கள். இவர்கள் நான்கு அடி உயரமுள்ள மண்சுவர் ஒன்றை வட்டவ ளைவாய் எழுப்பி, அதன்மேல் மூங்கில் கொம்புகளால் கூச்சான மேற்கோப்புக்கட்டி, புல்லினால் கூரைமேய்வார்கள். ஒரேவிதமான இக்குடிசைகளிலே சகல அந்தஸ்தான ஜனங்களும் வாசஞ்செய் வார்கள். அரசாளும் ராஜனுடைய அரண்மனையும் சதாகாலமும் உழைத்துப் பாடுபடும் அடிமையின் இருப்பிடமும் ஏறக்குறைய ஒரேவிதமாய்த்தானிருக்கும். மாண்டிங்கோ ஜாதியாரின வீடு களிலுள்ள தட்டுமுட்டுச் சாமான்கள் மிகச் சொல்பமானவைக ளே. அவர்கள் இரண்டடி நீளமுள்ள கால்களைத் தரையில் நாட்டி, அவற்றின்மேல் ஒழுங்கான மூங்கில்கொம்புகளைப் பரப்பி, அவைகள்மீதில் ஓர்விதப் பாயை அல்லது மாட்டுததோலை விரி த்து, தங்கள் படுக்கைக்கு வசதியான கட்டில்களை உண்டுபண்ணிக் கொள்வார்கள். சமயல் வேலைகளுக்கு மண்பாத்திரங்களையும், தண்ணீர்வைத்துக்கொள்வதற்கும் குடிப்பதற்கும் ஓர்வித மரப் பாத்திரங்களையும் சுரக்குடுக்கைகளையும் ஏற்படுத்தி உபயோ கித்துவருவார்கள். உட்காருவதற்கு இரண்டொரு தாழ்வான பீடங்கள் வீடுகளதோறும் இருக்கும். ஆபிரிக்கானர்கள் பலதா ரம் படைக்கிறவர்கள். அவர்களில் அநேகருக்கு ஒன்றுக்கதிக மான மனைவிகளிருப்பார்கள். இக்காரணத்தினிமித்தம் ஆபிரிக்கா னர் வீடுகளில் ஓயாத சண்டைசச்சரவுகளேயன்றி, சநதோஷ மும் சமாதானமுமான இல்வாழ்க்கைக் கிடையாது. சக்களத்தி களுக்குள் அடிக்கடி நடக்கும் கடுஞ்சச்சரவுகளினிமித்தம், புரு ஷனானவன் அவர்களை வெவ்வேறான குடிசைகளில் பிரித்துவைத திருப்பான். இவ்வாறு ஒரு கணவனுடைய ஆதீனத்திலிருக்கும் குடிசைகளெல்லாவற்றையும சுற்றி, மூங்கில் கொம்புகளினால் கோட்டைபோல வளையப்பட்ட வேலியொன்றிருக்கும். இப்படி ப்பட்ட வளைவுகளை சர்க்ஸ் என்றழைப்பார்கள். இவ்வித வளைவு கள் அநேகஞ்சேர்ந்தது அவர்களுடைய பட்டணமாம். பொ துவாய் இச்சனங்களுடைய குடிசைகளெல்லாம் ஒழுங்கீனமாய் அவனவனுடைய இஷ்டப்பிரகாரம் கட்டப்பட்டிருக்கும். ஆனால் அக்குடிசைகளைக் கட்டுவதில் சகலரும் கவனித்து அநுசரித்துவ

ரும் முறையொன்றுண்டு. அது யாதெனில், கடல்காற்றுத் தாரா ளமாய் வருவதற்கு குடிசைகளின் வாசல்களெல்லாம் தென்மேற் குத்திசையை நோக்கி விடப்பட்டிருக்கும். ஒவ்வொரு பட்ட ணத்திலும் பாண்டாங்கு என்று அழைக்கப்படும் பெரிய சா வடியொன்று கட்டப்பட்டிருக்கும். இச்சாவடிகள் பெரும்பா லும், அடர்ந்து தழைந்து நிழலிடும் பாரி விருட்சங்களின்கீழ் மூங்கில்கொம்புகளினால் கட்டப்பட்டிருக்கும். இச்சாவடிகளில் குடிகளைசசேர்ந்த பொதுவான காரியங்களைக்குறித்த ஆலோசனை களும் குற்றவாளிகள் விசாரணையும், வியாச்சியங்கள் தீர்த்தலும் நடக்கும். மேலும் இப்படிப்பட்ட இடங்களில் விருத்தாப்பியர் சோம்பேறிகள் முதலியவர்கள் புகையிலை குடிப்பதற்கும் ஊர்ச மாசாரங்களைப் பேசி நேரம்போக்குவதற்கும் கூடிவருவார்கள். அநேக பட்டணங்களில் மகம்மதியர் கட்டியிருக்கும் பள்ளிவாச ல்களில் ஜனங்கள் போய்த் தொழுதுவருவார்கள். இதுவரைக் கும் சொல்லப்பட்ட சங்கதிகள் ஆபிரிக்கானருக்குள் சுயாதீன ரானவர்களையே குறித்தவைகள். ஒவ்வொரு பட்டணத்திலும் சுயாதீனமான ஜனங்கள் ஓர் பங்காகவும், சுயாதீனமிழந்து தலை முறைதலைமுறையாய் அடிமைத்தனத்துக்கு உட்பட்டிருக்கும் குடிகள் மூன்றுபங்குக்கு அதிகமானவர்களுமாயிருக்கிறார்கள். இவ்வடிமை ஜனங்கள் நிலம் பயிரிடுவதிலும் ஆடுமாடுகளை மேய்ப் பதிலும் சகலவிதமான இழிவான தொழில்களைச் செய்வதிலும் வேலைகொள்ளப்படுவார்கள். மாண்டிங்கோ ஜாதியாருக்குள் அடி மைகளையுடைய எஜமான் தனக்குச் சொந்தமாகிய அடிமைகளை தன்னிஷ்டப்படிப் பிராணவதைசெய்யவாவது அல்லது அவர்களை அந்நியருக்கு விற்கவாவது கூடாது. அடிமை ஒருவன் குற்றஞ் செய்திருந்தால், கிராம மஹாஜனங்களுக்குமுன் அவன் துர்நடத் தையைக்குறித்து விசாரணைசெய்து, அவனுக்குப் பிராணதண்ட னையாவது அல்லது மற்றும் வேறெந்த சிக்ஷையாவது செய்வார்கள். யுத்தத்திலகப்பட்ட சிறைகளையும் குற்றங்களினிமித்தமாவது, பட்ட கடனைத் தீர்க்காமல் போனதினிமித்தமாவது, அடிமைத்த னத்துக்குத் தீர்க்கப்பட்ட ஜனங்களையும், எஜமான்கள் தங்களு க்கு இஷ்டமான பிரகாரம் நடத்துவார்கள். அவர்களை நிமித்தமி ன்றிக் கொன்றுபோட்டாலும் கேள்வியில்லை. தங்கள் வேலையாட் களையும் அடிமைகளையும் இவ்வளவு குரூரமாய் நடத்திவந்த பா

மர்களான ஆபிரிக்கானருக்குள் இப்பொழுது அநேக நல்ல மா றுதல்கள் உண்டாயிருக்கின்றன. ஐரோப்பாகண்டத்திலிருந்து வந்திருக்கும் பரோபகாரர்களாகிய கிறிஸ்துசமய போதகர்கள், இவ்வித ஆபிரிக்கா ஜனங்களுக்குள் கல்வியும் சன்மார்க்க நெறி களும் பரம்பச்செய்துவருகிறபடியால், முன் ஆபிரிக்கானருக்குள் வழங்கிவந்த அநேக குரூரசட்டங்கள் இப்போது மாறறப்பட்டி ருக்கின்றன. இப்பொழுது ஒருவன தான் பட்ட கடனைக் கொடுக்க நிர்வாகமற்றுப்போனால், அவனை விசாரணைக்குக் கொண்டுவந்து, அவன் வஞ்சகம் மோசமொன்றுஞ் செய்தவனல்லாவிட்டால், அவனுக்கு முன்போலப் பிராணதண்டனை முதலிய குரூர சிக்ஷை களைச் செய்யாமல், சொல்பகாலத்திற்கு அவனைச் சிறைச்சா லையில் வைத்திருந்து, பின்பு விடுதலையாக்கிவிடுவார்கள. ஆனால் இப்படிப்பட்ட கடன்காரன் தற்காலத்தில் தன்னிடத்திலுள்ள ஆஸ்திகளையெல்லாம் கடன்கொடுத்தவனுக்கு ஒபபுவிக்கவேண் டுவதுமன்றி, எக்காலத்திலாவது தான் செல்வத்தையடைகிறதா யிருந்தால், அப்பொழுது தன் கடன்களையெல்லாம் சரிவரத் தீர்த் துப்போட உடன்படவேண்டுவதும் அவசியம்.

பார்க் என்பவர் ஆபிரிக்காகண்டத்தில் யாத்திரைசெய்யவந்த காலத்தில், காம்பியாவைச் சேர்ந்த நாடுகளில் இறக்குமதியான வர்த்தகச்சாக்குகளென்னவெனில்: துப்பாக்கி முதலிய ஆயுதங் கள், வெடிமருந்து, இரும்புச்சாமான்கள், பலவகைச் சாராயங் கள், புகையிலை, தலையில் தரிப்பதற்கு பருத்திநூலால் நெய்த ஓர் விதக் குல்லாக்கள், மான்செஸ்தர் பட்டணத்தில் செய்யப்படும் பற் பலவகைத் துணிச்சாமான்கள், ஈந்தியாவிலிருந்து கொண்டுபோ கப்பட்ட சில சரக்குகள், பற்பல வகைப் பீங்கான் சாமான்கள் பாசிமணிகள், பின்னும் இவ்வித அற்பப்பொருள்கள் முதலிய வைகளே. ஐரோப்பிய வியாபாரிகள் இவ்விதச் சரக்குகளை ஆபி ரிக்கா வர்த்தகர்களுக்குக் கொடுத்துவிட்டு, அவர்களிடத்திலிருந் து [illegible]ங்கள், பொன்மணல், யானைதந்தம், மெழுகு, மிருகங்க ளின் தோல்கள் முதலியவற்றை வாங்கிக்கொண்டு பரிவர்த்தனஞ் செய்வார்கள். ஐரோப்பியர் ஆபிரிக்கானரிடத்திலிருந்து விசே ஷமாய்க் கொள்வனைசெய்துவந்த பொருள் அடிமைகளே. காம் பியாவைச் சேர்ந்த மாகாணங்களிலிருந்துமாத்திரம் வருஷம் ஒன் றுக்கு ஆயிரம் அடிமைகள்மட்டும் கொள்வாகள். நிர்ப்பாக்கி

யர்களாகிய இந்த அடிமைகளை வெகுதூரங்களிலுள்ள உள்நாடுக ளிலிருந்து, நிகரோ வியாபாரிகள் பிடித்துவந்து கடற்கரையைச் சேர்ந்த மாகாணங்களிலுள்ள வியாபாரிகளுக்கு விற்பார்கள். இந்த வியாபாரிகள் ஐரோப்பியரின் அடிமைவியாபாரக் கப்பல் வருமட்டும் தாங்கள் வாங்கின அடிமைகளைச் சுற்றுக்கிராமங்க ளில் பஞ்சு பஞ்சுகளாகப் பிரித்துவைத்திருப்பார்கள். கப்பல் வந்து சேரும்வரைக்கும் அடிமைகளை இரண்டு இரண்டுபேர்க ளாகச் சேர்த்து விலங்கிட்டு, நிலம் பயிரிடும் கடினவேலைகளை நட ப்பிக்கும்படி செய்து, அவர்களுக்கு அரைவயிற்றுப் போசனங் கொடுத்து அவர்களை வெகு கொடூரமாய் நடத்திவருவார்கள். அடிமைகளின் கிரயம் அவர்களைக் கொள்ளவரும் வியாபாரிகளின் தொகைக்குத் தக்கதாகக் காலத்துக்குக் காலம் வேறுபட்டிருக்கும். பொதுவாய் எவ்வனமும் சுகமும் பொருந்திய ஒரு ஆண்அடிமை யை (உ௰) பவுன்களுக்குக் கொள்வார்கள்.

சிலேட்டிஸ் என்னும் உள்நாட்டு அடிமைவியாபாரிகள் கடற் கரையோரங்களிலுள்ள ஆபிரிக்கா வியாபாரிகளுக்கு அடிமைக ளைத்தவிர சாம்பிராணி முதலிய பலவகைச் சுகந்தப் பிசின்வர்க்கங் களையும் மாவெண்ணெய் என்று அழைக்கப்படும் ஓர்வித விசேஷி த்த சாக்கையுங் கொண்டுவந்து விற்பார்கள். கடைசியாய்ச் சொல்லப்பட்ட மாவெண்ணெயானது ஓர்ஜாதி விருட்சத்தின் கொட் டைக்குள்ளிருக்கும் பருப்பை ஆலையிலிட்டு ஆட்டி எடுக்கப்படும். இது அச்சம் ஆவின்வெண்ணெய்போலவேயிருக்கும். இதைச் சுதேசிகள் வெகு பிரியமாய் விலைக்குக்கொண்டு, மிக அருமையான போசனபதார்த்தமாக வழங்கிவருவார்கள். உள்நாட்டு வர்த்தகர் கள் கொண்டுவரும் இவ்விதச் சாக்குகளைக் கடற்கரை மாகாணங் களிலுள்ள வர்த்தகர்கள் வாங்கிக்கொண்டு, அவர்களுக்கு விசேஷ மாய் உப்பை பதிலாகக் கொடுப்பார்கள். உள்நாட்டு ஜனங்கள் உப் பை மிக அருமையும் விலையேறப்பெற்றதுமான சாக்காக மதிப்பார் கள். உப்பானது கடற்கரை நாடுகளிலிருந்து உள்நாடுகளுக்குக் கொண்டுபோகப்படுவதுமன்றி, மூர்சென்னும் மகம்மதிய வர்த்தகர் கள் சகரா என்னும் மகா விஸ்தாரமான மணல்வனாந்தரத்தில் அங் கங்கே காணப்படும் உப்பளங்களிலிருந்து உப்பைச் சேகரித்துவ ந்து, உள்நாட்டு ஜனங்களுக்குக் கொடுத்து, அவர்களிடத்திலிருந்து தானியம், பருத்திநூல் புடவை அடிமைகள் முதலிய சாக்குகளைப்

பதிலாகக் கொள்வார்கள். உள்நாடுகளிலுள்ள சுதேசிகள் தாங்கள் செய்யும் இவ்வித பரிவர்த்தனைகளில் கௌரி என்றழைக்கப்படும் ஓர்ஜாதி சிறுகிளிஞ்சல்களை, நாம் வழங்கிவரும் செம்பு வெள்ளிக்காசு நாணயங்களைப்போலவே, வழங்கிவருவார்கள். இச்சனங்கள் வியாபார விஷயத்தில் ஐரோப்பியரோடு பழகத் துவக்கினபின்பு, ஐரோப்பியர் கொண்டுவந்த இரும்புச்சாமான்களாகிய விவசாயத்தொழிலுக்குரிய கருவிகளையும் யுத்த ஆயுதங்களையும் கண்டதின்மேல், இரும்பை மற்றெல்லாச் சாக்குகளிலும் மகா பிரயோஜனமுள்ள பொருளென்று மதிக்கத் தலைப்பட்டார்கள். ஆகையால் வியாபாரச்சாக்குகளின் விலையை மதிப்பதில் இரும்பு பாளங்களையே நாணயமாக வழங்கிவந்தார்கள். சகல சாக்குகளையும் இரும்புப்பாளக் கணக்கைக்கொண்டே எண்ணிவருவார்கள். திருஷ்டாந்தமாக: இருபது புகையிலைகளை ஒருபாளப் புகையிலை என்றும், நாற்பது புகையிலைகளை இரண்டுபாளப் புகையிலை என்றும், ஒருபுட்டிச் சாராயத்தை ஒருபாளச் சாராயம் என்றும், பத்துப்புட்டிச் சாராயத்தைப் பத்துபாளச் சாராயம் என்றும்எண்ணுவார்கள். மேலும் ஒருபாள உப்பை வாங்கிக்கொண்டு, ஒரு பாள தானியத்தைப் பதிலாகக் கொடுப்பார்கள். தற்காலத்தில் ஐரோப்பிய வர்த்தகர்கள் ஒருபாளம் பெறுமான ஏதாவதொரு சாக்கின் கிரயத்தை இரண்டு ஷில்லிங் அல்லது ஒரு ரூபா என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்படி வெள்ளித் தங்கநாணயங்கள் அவர்களுக்குள் வழங்கிவரத் தலைப்படுவது, படிப்படியாய் அவர்கள் நாகரீகமடைகிறார்களென்பதற்குத் திருஷ்டாந்தமேயாம். எப்படியெனில், பாமரர்களான ஜாதியாருக்குள்ளெல்லாம் வியாபாரவிஷயத்தில் பணத்தை நாணயமாக வழங்காமல், ஒரு சாக்குக்குப் பதிலாக மற்றொரு சாக்கைக் கொடுத்துப் பரிவர்த்தனஞ் செய்வதே புராதன வழக்கம். அச்சாதியார் படிப்படியாய் நாகரீகத்தில் தேறிவர அவர்கள் இவ்வித வழக்கத்தை விட்டுவிட்டு, சகலசாக்குகளையும் விற்பனை கொள்வனை செய்கிற விஷயத்தில் பணத்தையே நாணயமாக வழங்கிவருவார்கள்.

சமாசாரம்.

ஐரோப்பியயுத்தம்.—சென்ற ஜூலைமாசமுதல் பிரான்சியருக்கும் ஜெர்மானியருக்கும் நடந்துவந்த கொடியயுத்தம் இப்பொழுது முடிந்து, இருதிறத்தாருக்கும் சமாதானமுண்டானது மிகவும் சந்தோஷமானகாரியம். இந்த யுத்தத்தை முதலில் துவக்கினவர்களும், அதில் கடைசிவரைக்கும் அபஜெயமடைந்தவர்களுமான பிரான்சியருக்கு இதுவரையில் எண்ணிறந்த பெரிய நஷ்டங்கள் நேரிட்டிருக்கின்றன. மேலும் இப்பொழுது உண்டான சமாதான உடன்படிக்கையும் பிரான்சியருக்கு மிகவும் கசப்பானதாகவே இருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. உடன்படிக்கையின் முக்கிய பொருளென்னவெனில்: க-வது. பூர்வம் ஜெர்மானியாவைச் சேர்ந்திருந்தவைகளும் பின்பு அவர்களிடத்திலிருந்து பிடித்துக்கொள்ளப்பட்டவைகளுமான ஆல்சேஸ், லோரேன், மெத்ஸ் என்னும் மாகாணங்களைப் பிரான்சியர் ஜெர்மானியருக்குக் கொடுத்துவிடவேண்டியது. உ-வது. யுத்த நஷ்டங்களுக்காக ஜெர்மானியருக்குப் பிரான்சியர் இருநூறுகோடி ரூபாய் அபராதமாகக் கொடுத்து தீர்க்கவேண்டியது. நாளது வருஷத்தில் 40 கோடியும், அடுத்தவருஷத்தில் 80 கோடியும், அதற்கடுத்தவருஷத்தில் 80 கோடியுமாகக் கொடுக்கவேண்டியது. கடைசியில் கொடுக்கப்படும் 80 கோடி ரூபாயிக்குமாத்திரம் வட்டிகொடுக்கவேண்டியது.

நூதனமான புகைவண்டி.—சாதாரண தெருக்களில் ஓடத்தக்க நீராவிஇயந்திர வண்டியொன்று சீமையிலிருந்து சென்னைபுரிக்கு வந்திருக்கிறது. இரண்டுமூன்று இடங்களில் அதை ஓட்டிச் சோதித்துப்பார்த்து திர்ப்தியடைந்தார்கள். சாரதி தன் இஷ்டப்படி அதை எளிதில் நிறுத்தலாம். ஒருமணி நேரத்தில் 15 மீயில் வீதம் ஓடுகின்றது.